புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • சூலை 10, 2025 • புரட்சி 25 • முழக்கம் 30 • விலை ரூ.6.00

# மத எதிர்ப்புப் பரப்புரை அடிப்படை உரிமை
## வழக்கு போடும் காவல்துறைக்கு கழகத் தலைவர் கடும் கண்டனம்!

***மதத்தை எதிர்த்து கருத்து தெரிவித்தால் மதக் கலவரத்தை தூண்டுவதாக வழக்கு போடும் காவல்துறைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார் அவரது அறிக்கை...***

திராவிடர் விடுதலைக் கழகத்தின் கோவை மாநகரத் தலைவர் தோழர் நிர்மல் குமார் அவர்கள் தன்னுடைய முகநூல் பக்கத்தில் மருதமலை சுப்ரமணியர் கோவில் குடமுழுக்கு விழாவுக்கு முதல் நாளில் நான்கு லட்ச ரூபாய் மதிப்புள்ள "வெள்ளி வேல்"அய் காவி உடை அணிந்த ஒருவர் திருடிச் சென்ற செய்தியை தன்னுடைய விமர்சனத்தோடு பதிவு செய்திருந்தார். அதற்காக கோவை மாநகரத்தின் சி5 கவுண்டம்பாளையம் காவல் நிலைய ஆய்வாளர், அவர்மீது BNS 299 பிரிவின்படி மத மோதலை உருவாக்குகிற முயற்சி என்ற காரணம் சொல்லி அவருக்கு அழைப்பாணை அனுப்பி அழைத்து விசாரித்தும் இருக்கிறார்.



எங்களுடைய கருத்து சட்டத்தைப் பற்றி யாருக்காவது போதிய அறிவு வேண்டுமென்றால் அது காவல்துறை அதிகாரிகளுக்குத் தான் முதல் தேவையாக உள்ளது.

ஏராளமான உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற தீர்ப்புகள் ஏற்கனவே வந்திருக்கின்றன. மத சுதந்திரம் என்பது மதத்தைப் பரப்புவதற்கு உள்ள சுதந்திரம் மட்டுமல்ல; மதத்தை எதிர்த்துப் பரப்புரை செய்வதற்குமான சுதந்திரத்தையும் உள்ளடக்கியது என்ற பொருளில் ஏராளமான தீர்ப்புகள் வந்துள்ளன. இருந்தபோதும், யாரும் புகார் அளிக்காத நிலையில்கூட ஆய்வாளர் தானாக முன்வந்து இப்படிப்பட்ட மிரட்டும் நடவடிக்கைகளில் - தான் ஏற்றுக்கொண்ட மதவெறி சித்தாந்த கொள்கைப்படி இந்த வழக்கை பதிந்திருக்கிறார் என்றே கருதுகிறோம்.

இதன் அடிப்படையில் இரண்டு வேண்டுகோள்களை தமிழ்நாடு அரசுக்கும், காவல்துறை தலைமைக்கும் முன் வைக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

மத நம்பிக்கைக்கு எதிராக தன்னுடையக் கருத்தை கூறிவிட்டாலே அது ஏதோ இரு மதத்திற்கு இடையிலான மோதலை வளர்ப்பதற்காக செய்யப்பட்ட முயற்சி என்று கருதுகிற சட்ட அறிவு இல்லாத காவல்துறையினருக்கு அவ்வப்போது அரசியல் சட்டம் வழங்கியிருக்கிற அடிப்படை உரிமைகள், அரசியல் சட்டத்தின் 51 A (h) கூறுகிற அடிப்படை கடமைகள், மனித உரிமை குறித்த செய்திகளை அவர்களுக்குப் புரிய வைக்க ஏதேனும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

மத மோதலை உருவாக்கும் முயற்சி என்று தோழர் நிர்மல் குமார் மீது தானாக முன்வந்து வழக்குப் பதிவு செய்து இருக்கிற அந்த ஆய்வாளரும், இப்படிப்பட்ட வழக்குகளை இஸ்லாமிய கிறிஸ்தவர்களுக்கு எதிராக இழிவாகவும், அவதூறாகவும் பேசுகிற இந்து மதவெறி அமைப்பினர், பாரதிய ஜனதா கட்சியினர், - சாத்தானின் பிள்ளைகள் என்று பேசுகிற போலி தமிழ் தேசியர்கள் - இவர்கள் மீதெல்லாம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்பதையும் நாம் அறிய விரும்புகிறோம். மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் வாங்குகிற காவல்துறையினர் சட்டத்தின் அடிப்படையில் இயங்க வேண்டுமே தவிர, தான் வரித்துக் கொண்டிருக்கிற கொள்கையின் அடிப்படையில் சட்டத்தை வளைத்து பயன்படுத்தக் கூடாது என்பதையும் தமிழ்நாடு அரசு விழிப்புடன் கவனித்து அப்படிப்பட்ட புரிதல் உள்ளவர்களை - கொள்கை சாய்வு உள்ளவர்களை சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கிற பணிக்குப் பதிலாக வேறு பணிகளில அமர்த்தி தமிழ்நாட்டில் சட்ட ஒழுங்கு கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன் வைக்கிறோம்.

கவுண்டம்பாளையம் காவல் நிலைய ஆய்வாளரின் முன் வரலாறுகளையும் ஆய்ந்தறிந்து அவரது தான்தோன்றித்தனமான இந்தப் போக்கினை கட்டுப்படுத்த வேண்டும் என்பதோடு உரிய துறைசார் நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் அன்போடு முன் வைக்கிறோம்.

அதுவரை கழகத் தோழர்களும் ஆர்ப்பாட்டங்கள், முற்றுகை போன்ற எந்த ஒரு நடவடிக்கையையும் தற்காலிகமாக ஒத்தி வைக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

***- கொளத்தூர் மணி,***
***தலைவர்,***
***திராவிடர் விடுதலைக் கழகம்.***
***03.07.25.***

## சுயமரியாதை நூற்றாண்டு மேடையில் ஜாதி மறுப்பு திருமணம்!

5/7/25 அன்று மாலை 5 மணிக்கு, சென்னை நங்கநல்லூரில், தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் மகி. எட்வின் பிரபாகரன் தலைமையில், ம.குகாநந்தன் முன்னிலையில் நடைபெற்றது. இரண்யா வரவேற்புரையாற்றினார்.



"சுயமரியாதை இயக்கத்தின் வீரஞ்செறிந்த போராட்டங்கள்" எனும் தலைப்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார். வரலாற்று ஆவணமாக இவ்வுரை அமைந்தது. "குடிஅரசு உருவாக்கிய அதிர்வலைகள்" எனும் தலைப்பில் ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி ஆழமான ஆய்வுரையை நிகழ்த்தினார்.

பொதுக்கூட்டத்தின் சிறப்பம்சமாக, பொதுக்கூட்ட மேடையிலேயே ஆனந்தகுமார் - ஷர்மிளா இணையரின் சுயமரியாதை ஜாதி மறுப்புத் திருமணமும் நடைபெற்றது. இந்நிகழ்வு மக்களை வெகுவாகக் கவர்ந்தது. கார்மேகம் - வீரமணி - பேரன்பு - திராவிட மகிழன் குழுவினரின் பகுத்தறிவுப் பாடல்கள் மக்களை சிந்திக்க வைத்தன. தாம்பரம் நகர அமைப்பாளர் அருண் கோமதி நன்றியுரையாற்றினார்.

களப்பணியாற்றிய தோழர்களுக்கும் கலைஞர்களுக்கும் நினைவுப்பரிசாக புத்தகங்களை, தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, தென்சென்னை மாவட்டத் தலைவர் மா.வேழவேந்தன், வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், வடசென்னை மாவட்ட அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி, வடசென்னை மாவட்டத் துணைச்செயலாளர் ஆ.வ.வேலு, சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.அருண் ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர். கடலூர் மாவட்டம் சார்பாக கழகத் தோழர் சிவக்குமார் ரூ.10,000 முழக்க சந்தா வழங்கினார்.

பெரியார் சிந்தனையாளர் இயக்க ஒருங்கிணைப்பாளர் தீனா, திஇதபே மாவட்டச் செயலாளர் அன்பு, தமிழ்ச் சிந்தனையாளர் பேரவை உதயன்,CPIM ஆலந்தூர் பகுதிக்குழு உறுப்பினர் வெங்கடேசன், ஆலந்தூர் தொகுதி விசிக தொண்டரணி துணை அமைப்பாளர் ஆ.ஓம்பிரகாஷ், திமுக மாவட்ட பிரதிநிதி வேல்முருகன், காங்கிரஸ் மாவட்ட அலுவலகப் பொறுப்பாளர் ஆதம் பிரகாஷ் உள்ளிட்ட தோழமை இயக்க தோழர்கள் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

## பீகாரில் பில்லி சூனிய நம்பிக்கையால் 200 பேர் முன்னிலையில் ஒரே குடும்பத்தில் ஐவர் எரித்து கொலை!

பில்லி சூனியக்காரரர் என்று ஒரு குடும்பத்தின் ஐந்து பேர் எரித்துக் கொல்லப்பட்ட கொடூர சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பீகாரில் அரங்கேறி உள்ளது. பியூரின் மாவட்டத்தில் டெட்காமா என்ற கிராமம் உள்ளது. இந்த கிராமத்தில் வாழும் ராம்தேவ் மகத்தோ என்பவரின் குழந்தைக்கு உடல் நலம் சரியில்லாத நிலையில் சிகிச்சைக்கு கிராம வைத்தியர் பாபுலால் ஒரன் (50) என்பவரிடம் சென்றுள்ளனர். சிகிச்சை பலனின்றி குழந்தை இறந்து விட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு ஊர்த் தலைவர் முன்னிலையில் கிராம மக்கள் கூடினார்கள்.

சிகிச்சை அளித்த கிராம வைத்தியர் குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரும் பில்லி சூனியக்காரர்கள் என்று கிராமத்தினர் முடிவு செய்தனர். அவர்களை கட்டையால் அடித்து சாகடித்து பிறகு தீ வைத்து எரித்து சடலங்களை ட்ராக்டர் ஒன்றில் ஏற்றி கிராமத்தில் குழித் தோண்டி புதைத்தனர். இதில் உயிர் தப்பிய வைத்தியரின் 16 வயது மகன் இந்த தகவலை தங்களுடைய உறவினர்களிடம் தெரிவித்தார்.

மாவட்ட காவல்துறை அதிகாரி பிரமோத்குமார் மண்டல் இந்த கொடூரத்தை செய்தியாளர்களிடம் விளக்கினார். அப்போது குடும்பத்திலிருந்து உயிர் தப்பிய சம்பவத்தை நேரில் பார்த்த 16 வயது இளைஞனும் இதை செய்தியாளரிடம் கண்ணீர்விட்டு கதறிக்கொண்டே கூறினார். சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ், பீகார் மாநிலம் காட்டுமிராண்டித் தனத்தின் உச்சத்தில் உள்ளது என்று குறிப்பிட்டார்.

## கழக ஏட்டுக்கு வளர்ச்சி நிதி!

கழக மாவட்டச் செயலாளர் உமாபதி-பாரதி இணையரின் 21-ம் ஆண்டு இணையேற்பு நாளை முன்னிட்டு கழக ஏட்டுக்கு ரூ.2000 நன்கொடை வழங்கினர். மேலும் மதுரை கழகத் தோழர் அழகர் பிரபாகரன் அவரது மகன் இளமகிழன் பிறந்தநாளை முன்னிட்டு ரூ.2000 நன்கொடை வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

## தலையங்கம்

# சமுகநீதி விடுதிகள்

தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளின் கீழ் செயல்படும் அரசு பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் விடுதிகளாக அழைக்கப்பட்டு வந்தன.

‘சமூகநீதி விடுதிகள்’ என்றே அழைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது பாராட்டி வரவேற்கத்தக்க அறிவிப்பாகும். விடுதிகளில் தலைவர்களின் பெயர் சூட்டப்பட்டு செயல்பட்டு வரும் சில விடுதிகளும் உள்ளன. அந்த விடுதிகள் அந்தத் தலைவரின் பெயர்களோடு சமூகநீதி விடுதி என்று சேர்த்து அழைக்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

பள்ளி மாணவர்கள் ஜாதி அடையாளத்தை அறிவிக்கும் கயிறுகளைக் கட்டிக்கொண்டு பள்ளிக்கு வரக்கூடாது என்று இந்த ஆண்டு பள்ளி திறப்புக்கு முன் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை ஒரு சுற்றறிக்கை அனுப்பி உள்ளதையும் நாம் சுட்டிக் காட்ட வேண்டும். பள்ளிகளில் மாணவர்களிடையே ஏற்படும் ஜாதி மோதல்களைத் தடுப்பது குறித்து ஆராய நீதிபதி சந்துரு தலைமையில் ஒரு ஆணையத்தை தமிழ்நாடு அரசு நியமித்தது. ஆணையம் மிக சிறப்பான பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியது.

அரசு பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும் ஜாதிப் பெயர்கள் முன்னொட்டும், பின்னொட்டும் இருக்கக் கூடாது என்பது அந்த பரிந்துரைகளில் ஒன்றாகும். அதன்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் கூறியுள்ளார். ஒடுக்கப்பட்ட மாணவர்களின் கல்வித் தர மேம்பாட்டுக்காக இந்த விடுதிகள் உருவாக்கப்பட்டன. அண்மையில் சென்னை சைதையில் பழமை வாய்ந்த எம்.சி ராஜா ஆதிதிராவிட விடுதியை மிக நவீன மாளிகையாக்கி தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைத்தார்.

பார்ப்பனர்கள் அல்லாத மாணவர்கள் சென்னையில் தங்குவதற்கு அந்த காலத்தில் இடம் கிடைப்பது இல்லை. ஜாதி பார்வையில் தங்கும் இடங்கள் மறுக்கப்பட்டன. உணவு விடுதிகளிலும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அந்த நிலையில் திராவிடர் சங்கத்தை முதன் முதலில் நிறுவிய நீதிக்கட்சித் தலைவர் டாக்டர் நடேசன் 1916 இல் பார்ப்பனர்கள் அல்லாத மாணவர்களுக்கான விடுதி ஒன்றை உருவாக்கி, அதற்கு ‘திராவிடர் இல்லம்’ என்று பெயர் சூட்டினார்.

திருவல்லிக்கேணி அக்பர் சாயுபு வீதியில் துவக்கப்பட்ட அந்த இல்லம் சென்னைக்கு படிக்க வந்த பார்ப்பனர் அல்லாத மாணவர்களுக்கு புகலிடமாக விளங்கியது. இதே போல் ‘சேரி’ என்ற அடையாளத்தைத் குறிக்கும் ‘காலனி’ என்ற பெயரும் அரசு பதிவுகளில் இருந்து தமிழ்நாடு அரசு நீக்கி உள்ளது. தொலைக்காட்சியில் ‘நீயா நானா’ நிகழ்ச்சியில் பேசிய ஒரு பெண் தங்களை ‘காலனிக்காரர்கள்’என்று அடையாளப்படுத்துவதை வேதனையுடன் சுட்டிக்காட்டினார். அடுத்த இரண்டு நாட்களில் தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவிப்பு வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

ஜாதி சங்கங்கள் இளைஞர்களிடையே ஜாதி உணர்வுகளை தூண்டி விடுகின்றன. போதை பழக்க வழக்கங்களுக்கு இளைஞர்கள் அடிமையாகி வருவதும் அதைவிடக் கொடுமையான இந்த ஜாதி போதையில் சிக்க விடாமல் தடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு மட்டுமல்ல; சமூகத்துக்கும் உண்டு. சமூக நீதியின் வரலாறு, ஜாதி எதிர்ப்பு, பெண்களை மதித்தல், அவர்களின் சம உரிமைகளை அங்கீகரித்தல், மூடத்தனத்தை எதிர்க்கும் அறிவியல் கருத்துக்களை பள்ளி பாடங்களில் இணைக்க வேண்டியது அவசியம். திராவிட மாடல் ஆட்சியால் தான் இதைச் செய்ய முடியும்.

சமூக நீதியின் இறுதி இலக்கு ஜாதி அடையாளங்களை அழித்து சம உரிமைகளை உருவாக்குவது தான். தங்களுக்கு இட ஒதுக்கீடுகள் வேண்டாம்; ‘ஜாதியற்றவர்கள்’ என்ற அரசாணை வேண்டும் என்று நீதிமன்றத்தில் வந்த ஒரு வழக்கிற்கு ஆதரவாக அண்மையில் நீதிமன்றம் தீர்ப்பளித்து. ஜாதியற்றவர் சான்றிதழ் வழங்க அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இட ஒதுக்கீடு உரிமைகளுக்கு இப்போது ஜாதி சான்றிதழ்களை பெற்று வருகிறோம். இந்த இட ஒதுக்கீடு உரிமை வேகம் வேகமாக அமல்படுத்தப்படும் போதுதான் ‘ஜாதியற்றவர்கள்’ என்ற சான்றிதழ் சமுதாயத்துக்கு கிடைக்கும்.

உச்ச நீதிமன்றத்தில் கூட பணியாளர்களுக்கு சுதந்திரத்திற்குப் பிறகு இப்போதுதான் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு உரிமைக்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அதுவும் சமூக நீதியில் நம்பிக்கை உள்ள கவாய் தலைமை நீதிபதியாக வந்ததற்குப் பிறகுதான் இது சாத்தியமாயிற்று. சமூக நீதிக்கான திட்டங்கள் அனைத்து துறைகளிலும் விரிவுப்படுத்த வேண்டும்.

# சுயஜாதிப் பற்று ஜாதி எதிர்ப்பு அல்ல!

*திரிபுவனம் காவல் நிலையத்தில் நடந்த சித்திரவதை படுகொலையை சகித்துக் கொள்ள முடியவில்லை. காவல்துறையின் அடக்குமுறை கலாச்சாரம் தொடர்ந்து கொண்டு இருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று.*

*அதே நேரத்தில் இப்படி ஒரு படுகொலை நடந்திருக்கிறது என்ற செய்தி வந்தவுடன் தமிழ்நாடு முதல்வர் அவசரமாக அதிகாரிகளைக் கூட்டி ஆலோசித்து குற்றத்தில் தொடர்புடைய ஐந்து காவல்துறையினர் மீது சஸ்பெண்ட் என்ற பெயரளவிலான நடவடிக்கையை எடுக்காமல், கொலைக் குற்றத்தின் கீழ்கைது செய்ய உத்தரவிட்டுள்ளார். அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*மாவட்ட காவல்துறை அதிகாரியும் காத்திருப்பு பட்டியலில் வைக்கப்பட்டிருக்கும் அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. இதற்குப் பிறகும் இதில் அரசை குற்றம் சாட்டுவதற்கு ஏதேனும் ’சந்து பொந்து ’இருக்கிறதா? என்று தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள். பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் அறிக்கை அதைத்தான் சுட்டிக் காட்டுகிறது. காவல் மரணம், போதை மருந்து, பெண்கள் பாதுகாப்புப் பிரச்சனைகளில் தவறு செய்யும் காவல்துறையானாலும் அரசியல்வாதியாக ஆனாலும் சமூக விரோதியானாலும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் வெளிப்படையாக அறிவித்திருக்கிறார்.*

*மற்றொரு நிகழ்வையும் சுட்டிக்காட்ட வேண்டும். நாயுடு சமூகத்தைச் சார்ந்த ஒரு பெண்ணும் ஆசாரி சமூகத்தைச் சார்ந்த ஒரு இளைஞரும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள். வசதி படைத்த பெண்ணின் தந்தை இந்த இணையர்களை பிரிப்பதற்கு கட்டப்பஞ்சாயத்து நடத்தும் அதிகார செல்வாக்கு உள்ள நபர்களை நாடினார். இதில் புரட்சிப் பாரதம் கட்சித் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் பூவை ஜெகன் மற்றும் காவல் துறை அதிகாரி கூடுதல் டிஜிபி ஜெயராம் ஆகியோருக்கு தொடர்பு இருக்கிறது என்று குற்றம் சாட்டப்பட்டது.*

*நீதிமன்றத்தில் இதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. உயர் நீதிமன்றம் இருவரையும் கைது செய்ய உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றம் வழியாக இருவரும் பிணை விடுதலை பெற்றுள்ளனர். காவல்துறை வாகனத்தில் மணமகனின் தம்பி கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளார் என்பதை காவல்துறை அதிகாரியே ஒப்புக் கொண்டுள்ளார்.*

*இவ்வளவுக்கும் பிறகு இருவரையும் கைது செய்ததற்காக தமிழ்நாடு அரசைக் கண்டித்து எழுதுகிறார்கள். ஆதிக்க ஜாதியின் அடியாட்களாக கட்டப்பஞ்சாயத்து செய்வதைக் கண்டித்து ஜாதி எதிர்ப்பு அமைப்புகள் எந்த கண்டன குரலையும் எழுப்பவில்லையே என்ற வருத்தம் நமக்கு ஏற்படுகிறது.*

*மாறாக ஜாதியற்றவர்களின் குரலாக அடையாளப்படுத்தி அமைப்பு நடத்துகிறவர்கள் இந்த கைதைக் கண்டித்து எழுதுகிறார்கள். காவல்துறை அதிகாரி ஆனாலும் சட்டமன்ற உறுப்பினரானாலும் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துபவர் மீது அரசு நடவடிக்கை எடுக்கும் போது அதை ஆதரிக்க வேண்டியவர்கள் அரசை குற்றம் கூறுவதிலேயே குறியாக இருக்கிறார்கள் என்பதுதான் வேதனை.*

*ஒடுக்கப்பட்ட சுயஜாதி மக்களின் உரிமைக்குப் போராடுவது ஜாதி எதிர்ப்புதான் என்பதில் சந்தேகம் இல்லை. அதே நேரத்தில் ஜாதி மறுப்பு இணையர்களைப் பிரிக்க ஜாதி ஆதிக்கவாதிகளுக்கு கட்டப்பஞ்சாயத்து செய்பவரை ஆதரிப்பது ஜாதி எதிர்ப்பு அல்ல. அதுசுயஜாதியின் மீதான கண்மூடித்தனமான பற்று. சுயஜாதி உரிமை, சுயஜாதிப் பற்றாக மாறினால், அது ஜாதி தான்; ஜாதி எதிர்ப்பு அல்ல!.*

# கழகத் தலைவருக்கு பிறந்தநாள் வாழ்த்து!

*20.06.2025 அன்று கழகத் தலைவரின் 78 வது பிறந்தநாளில் சேலம் மாவட்ட மகளிர் அணி சார்பில் தலைவரை சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்து கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. கழகத் தலைவருக்கு பிறந்தநாள் பரிசாக மகளிர் அணி சார்பில் ரூ.10,000 வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சேலம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் சுதா, சரசுவதி மற்றும் தோழர்கள் கலைச்செல்வி, காயத்ரி, கோமதி, கீதா, தேன்மொழி, இராணி, அருள்மொழி, மகிழினி ஆகியோர் கலந்துகொண்டனர்.*



# சிந்தனையை தூண்டும் நூல்!

*நீங்கள் நாத்திகரா? இதைப் படிக்க வேண்டாம் என்ற தலைப்பில் அறிவுச் சுடர் வெளியீட்டகம் நூல் ஒன்று வெளியிட்டுள்ளது. நூலின் நோக்கம் விளக்கப்பட்டுள்ளது.*

*நீங்கள் நாத்திகரா? இதைப் படிக்கவேண்டாம் என்று தலைப்பிட்டதன் காரணம் இந்தப் புத்தகத்தின் கேள்விகள் அனைத்தும் உங்களைப் பொருத்த வரையில் பொருத்தமற்றதே. ஆனாலும் புத்தகம் முழுவதையும் படித்துவிட்டீர்களானால் ஒரு கடவுள் நம்பிக்கையாளரிடம் எவ்வாறு விவாதிப்பது அல்லது சிந்தனையைத் தூண்டுவது என்பதற்கு ஒரு வழிகாட்டலாக இருக்கும். அதுபோல மறு வெளியீடுகளில் இதனை மேம்படுத்த நீங்களும் உதவலாம்.*

*நூல் விலை: ரூ.50*

*கிடைக்கும் இடம்: அறிவுச் சுடர் வெளியீட்டகம், திருச்சி*

# ‘டார்வின்’ நேருக்கு நேர் நடந்த விவாதம்!

## கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை(6)

-விடுதலை இராசேந்திரன்

***உயிர்கள் எப்படி தோன்றின? இந்த கேள்விக்கான பதில்கள் காலத்துக்கு ஏற்றார் போல் மாறிக்கொண்டிருக்கின்றன. இந்த கேள்வி எப்போது உருவானது? மனித மூளை உருவான பிறகுதான். கடவுளை, மதத்தை, ஜாதியை உருவாக்கியது மனித மூளை தான்.***

ஆதிசேஷன் என்ற பாம்புதான் பூமியைத் தாங்கிக் கொண்டு இருப்பதாக இந்து புராணங்கள் கூறுகின்றன. நானே கடவுள்; பக்தர்களைக் காக்கவும் வர்ண தர்மத்தை நிலைநாட்டவும் நான் வந்திருக்கிறேன். தர்மம் மீறப்படும்போது நான் அவதாரம் எடுத்து வருவேன். அது சாம்ப வாமி யுகே, யுகே என்று கீதையில் கிருஷ்ண பகவான் கூறுவதாக எழுதி வைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல கடவுளே மனிதர்களை நான்கு வர்ணங்களாக பிராமணன், சத்ரியன், வைசியன், சூத்திரன் என்று படைத்தார் என்றும் கீதை கூறுகிறது.





இந்த மனிதர்களை வர்ண பாகுபாடுடன் உயிரையும் உடலையும் தந்து பூமிக்கு அனுப்பியவர்கள் கடவுள்கள் தான் என்ற நம்பிக்கை மக்கள் மீது திணிக்கப்பட்டது. உண்மையில் கடவுள் எந்த மனிதரையும் படைக்கவில்லை. அது பரிணாம வளர்ச்சியின் வடிவம் என்று கண்டறிந்தார் சார்லஸ் டார்வின். தந்தையின் கட்டளைகளை ஏற்று மதகுருவுக்கான கல்வி பயின்றவர், அதில் நாட்டம் அடையவில்லை. ஒரு கப்பலில் ஏறி உலகைச் சுற்றி ஆராய்ந்தார். பரிணாம வளர்ச்சி கருத்தியலை உருவாக்கினார்.

உண்மையில் உயிர் எப்படி தோன்றியது? உயிர் தானாகவே தோன்றியது. மழை நீர் தனக்கு என்று தானாகவே ஒரு பாதையை அமைத்துக் கொண்டு ஓடுவது போல், காற்று பாறைகளை தானாக செதுக்கி கொண்டு போவது போல், இரண்டு மேகங்கள் மோதும் போது மின்னல் பீறிடுவதைப் போல், ஒரு குறிப்பிட்ட சூழல் கூடி வந்தபோது சில ரசாயனங்களின் அதிசய இணைப்பாக அதிசய சங்கமாய் உயிர் உருவானது. அப்படி உருவான நிலையான முதல் உயிர் துகள்தான் ‘ஆர்என்ஏ’ என்பது.

ஆர்என்ஏ என்பது கண்ணுக்கு தெரியாத ஒரு ரசாயன சங்கிலி. அதற்கு தன்னைத்தானே மறுபடியும் பிரதி எடுத்துக் கொள்ளும் அசாத்திய வல்லமை உண்டு. உலகின் முதன் முதலில் தோன்றிய இந்த ஆர்என்ஏ தொடர்ந்து பெருகி பெருகிப் பல தலைமுறைகளை உருவாக்கி காலத்தை வென்ற ஒரு மிக நீண்ட அறுக்க முடியாத சங்கிலித் தொடராய் இன்றும் உயிர் வாழ்கிறது.

**உண்மையில் உயிர் எப்படி தோன்றியது? உயிர் தானாகவே தோன்றியது. மழை நீர் தனக்கு என்று தானாகவே ஒரு பாதையை அமைத்துக் கொண்டு ஓடுவது போல், காற்று பாறைகளை தானாக செதுக்கி கொண்டு போவது போல், இரண்டு மேகங்கள் மோதும் போது மின்னல் பீறிடுவதைப் போல், ஒரு குறிப்பிட்ட சூழல் கூடி வந்தபோது சில ரசாயனங்களின் அதிசய இணைப்பாக அதிசய சங்கமாய் உயிர் உருவானது. அப்படி உருவான நிலையான முதல் உயிர் துகள்தான் ‘ஆர்என்ஏ’ என்பது.**

அது தலைமுறைக்குத் தலைமுறை தாவுவதால் அதை மரபு என்றும், ரசாயன துகள்கள் என்பதால் அணு என்றும், இரண்டையும் இணைத்து மரபு அணு என்றும் அழைக்கிறோம். இன்று வரை நம்மை தாக்கும் பல வகை கிருமிகள் வெறும் ஒரு ஆர்என்ஏ சுருள் சங்கிலி கொண்டவைதான். உதாரணத்திற்கு இன்று உலகயே அச்சுறுத்தும் வைரஸ்கள் ஒரு ஆர்என்ஏ மரபு கொண்டவைதான்.

உலகம் தோன்றிய புதிதில் உருவான அந்த ஆர்என்ஏ என்னும் சங்கிலி பிறகு கூடுதல் வலிமை பெற்று டிஎன்ஏ என்று மாறியது. அந்த டிஎன்ஏ என்னும் கால சூழலுக்கு ஏற்றார் போல் தன்னைத்தானே பரிணமித்துக் கொண்டே போக பல வகை உயிரினங்கள் தோன்றின. அப்படி தொடர்ந்து பரிணமித்து கொண்டே போனதன் தற்போதைய உச்சந்தான் இப்போது நாமாக இருக்கிறோம்.

டார்வினின் இந்த கருத்துக்கு கடும் எதிர்ப்புகள் எழுந்தன. மற்றொரு கண்டுபிடிப்பையும் அவர் அறிவித்தார். அது என்ன?

**“அனைத்திற்குள்ளும் உயிர்வாழ்வதற்கே பெரும் போட்டி நிகழ்கிறது. இந்த “Struggle for existence” எனும் வாழ்வியல் போட்டியில் ஜெயிக்க வேண்டும் என்றால், எந்தச் சூழலிலும் பிழைக்கும் வல்லமை வேண்டும். இயற்கையில் எதுவுமே நிலையானதல்ல, எல்லாமே காலத்தோடு மாறிக்கொண்டே இருக்கும், இந்த மாற்றங்களுக்கு ஈடுகொடுத்துத் தானும் அதற்குத் மாறி, “Adopt” செய்துகொண்டே இருந்தால்தான், இயற்கையின் இந்தச் சவால்களை மீறிப் பிழைக்க முடியும். இப்படி இயற்கையோடு இணைந்து மாறிக்கொண்டே இருக்கும் வல்லமை கொண்ட ஜீவராசிகளால் மட்டும்தான் தாமும் பிழைத்து, அதிக எண்ணிக்கையில் தன் இனத்தையும் பரப்பிக்கொள்ள முடியும். இதைத் தான் இயற்கைத் தேர்வு, “Natural selection” என்றார் சார்லஸ் டார்வின். இந்தத் தேர்வில் தேர ஒரே ஒரு விதிதான்: “Survival Of The Fittest”. சூழ்நிலைக்கு ஏற்ப, தன்னைத் தானே மாற்றிக் கொண்டும் எதற்கும் பொருத்திக் கொள்ளும் வல்லமை பெற்றவை மட்டும்தான் பிழைத்துக்கொள்ள முடியும்”.**

சூழலை உணராமல் இருப்பது, அதற்கேற்ப மாறாமல் இருப்பது, பொருத்தமாய் மாறாமல் இருப்பது என்று பிழைக்கத் தெரியாமல் தவிக்கும் ஜீவன்களை அப்புறப்படுத்திவிட்டு, போட்டியில் பங்கேற்கும் தயார் நிலையில் இருப்பனவற்றை மட்டும் ஆட்டத்தில் சேர்த்துக்கொள்கிறது இயற்கை.

கடவுள் மனிதனை உருவாக்கவில்லை என்று மனித பிறப்பிலிருந்து கடவுளை ஒதுக்கி வைத்த டார்வின் கருத்தை மதவாதிகள் கடுமையாக எதிர்த்தார்கள். கிபி 1860 ஆம் வருடம் ஜூன் மாதம் இங்கிலாந்து ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வளாகத்தில் மிகப்பெரும் வாதம் ஒன்று நடந்தது. இயற்கை தேர்வின் மூலம் உயிரினங்களின் தோற்றம் என்ற நூலை அப்போது வெளியிட்டிருந்தார் சார்லஸ் டார்வின். பரிணாம தத்துவத்தை 230 பக்கங்களில் அந்த நூலில் அவர் விவரித்து இருந்தார்.

பாதிரியார்கள் டார்வினுக்கு பகிரங்கமாக பொது மேடையில் விவாதிக்க தயாரா? என்று சவால் விட்டார்கள். சவாலை டார்வின் ஆதரவாளர்கள் ஏற்றார்கள். டார்வின் ஆதரவாளர்கள் ஹக்ஸ்லியும், ஹூக்கரும் பாதிரியார்களுடன் நேரடியாக விவாதிக்க பல்கலைகழகம் வந்திருந்தனர். டார்வின் கருத்துக்களை எதிர்ப்பதற்கு பிஷப் வில்பர் போர்ஸ் என்ற பாதிரியார் கம்பீரமாக கர்வத்தோடு தலை நிமிர்ந்து வீற்றிருந்தார். அவரைச் சுற்றி அவரது சீடர்கள் சூழ்ந்து நின்றார்கள், விவாதம் தொடங்கியது.

வேத நூலை முத்தமிட்டு சிலுவை ஏந்திய கரங்களுடன் தொண்டையை கனைத்து விட்டு பேச ஆரம்பித்தார் பிஷப்.

**“மக்களே பரம பிதாவின் பெயரால் உங்களை வேண்டுகிறேன் சாத்தானின் அவதாரமான சார்லஸ் டார்வின் நீங்கள் எல்லாம் குரங்கிலிருந்து தோன்றியவர்கள் என கூசாமல் கூறியிருக்கிறான். பாலூட்டி சீராட்டி வளர்த்த உங்கள் பாட்டன்மார்களும் முப்பாட்டன்மார்களும் குரங்குகளா? இதை ஏற்கப் போகிறீர்களா? எனது கேள்விக்கு இங்கு அமர்ந்திருக்கும் குரங்கின் சீடர்கள் என்ன பதில் தருவார்கள்? இவர்கள் குரங்கிலிருந்து உதித்ததாக சொல்வது தான் பாட்டி வழியா? பாட்டன் வழியா? என்ற கேலியுடன் டார்வின் ஆராய்ச்சியை கடுமையாக எதிர்த்தார்”.**

டார்வின் சீடர் ஹக்லி நெற்றியடி தந்து பதில் கூறினார். அறிவியல் பூர்வமாக அவர் அனைத்து மறுப்புகளையும் எடுத்து வைத்தார். கூடியிருந்த மக்கள் இந்த அறிவியல் கருத்துக்களை உணர்ந்து நியாயமாக ஏற்க வைப்பதில் அவர் வெற்றி பெற்றார் அறிவியலுடன் மதத்துக்கு விவாதம் வரலாற்றில் தொடங்கியது.

அதன் பிறகும் டார்வின் எதிர்ப்பு குறையவில்லை. குரங்குகளை கண்ட இடமெல்லாம் மதவாதிகள் கல்லால் அடித்துத் துரத்தினார்கள். இங்கிலாந்தின் தேவாலயங்களில் கருப்பு உடை தரித்த பாதிரியார்கள் டார்வின் புத்தகத்தை தங்கள் காலில் போட்டு மிதித்தார்கள். இறைவனின் புனித கொள்கையை சாத்தானாகிய டார்வின் இடமிருந்து காப்போம் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். ஆனால் வரலாற்றுப் போக்கில் டார்வின் அறிவியல் கருத்தை மதவாதிகளால் மறுக்க முடியவில்லை.

1860 இல் இப்படி கடுமையாக எதிர்த்தவர்கள் 1996 இல் கீழே இறங்கி வந்தார்கள். வாடிக்கன் நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கு அன்றைய போப் ஜான் பால் ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். அதில் கடவுள் மனிதனை பிடித்து வைத்து உருவாக்கவில்லை, படிப்படியாக பரிணம வளர்ச்சி மூலம் மனிதனை தேவன் உருவாக்கினான் என்று கீழே இறங்கி வந்தார்கள். காலில் போட்டு மிதித்த சாத்தானின் கருத்தை 137 ஆண்டுகள் கழித்து சிறிது ஏற்கிறோம் என்ற நிலைக்கு அவர்கள் கீழே இறங்கினார்கள். அறிவியல் வென்றது! மதம் தோற்றது.

எல்லா வாதங்களிலும் தோற்ற பிறகு ஒரு பக்தன் முன்வைக்கும் கடைசி இரண்டு வாதங்கள் இருக்கின்றன. “நீங்க நம்பினா; நம்புங்க நம்பாட்டி போங்க, அந்த கோயிலுக்குப் போனா எனக்குள்ள ஒரு ஃபீலிங் வருது பாருங்க, அதாங்க கடவுள்! என்ன வேணா சொல்லுங்க, நமக்கு மேல ஏதோ ஒரு பவர் இல்லாம இந்த உலகம் உருவாகியிருக்க முடியுமா? ஒன்று உள்ளே, இன்னொன்று வெளியே” என்பதே அவர்வாதம்.

புறவய உலகத்தின் ’தோற்றம்’ குறித்த புதிரையும், அகவயமாக மனித மூளையில் தோன்றும் ’உணர்வு’ குறித்த புதிரையும் விடுவிக்கும் முயற்சியில் பெரும் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது அறிவியல். மதவாதிகளின் மொழியில் சொல்வதென்றால் ’பிரம்ம ரகசியத்தையும்’ ‘ஆன்ம ரகசியத்தையும்’ ’கண்டு’, பிறகு அதனை ’விண்டு’ உலகத்திற்குச் சொல்லவும் முனைந்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

***(உதவிய நூல்கள்: மருதையன் – இளநம்பி எழுதிய மதமும் அறிவியலும் நூலிலிருந்து, மருத்துவர் ஷாலினி எழுதிய கொஞ்சம் டார்வின், கொஞ்சம் டாக்கின்ஸ் நூலிலிருந்து)***

-தொடரும்...

Posted at Egmore RMS, Pathirika Channel,Chennai-08.
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கோயில்களைப் பள்ளிகளாக மாற்றிய பூந்தோட்டம்!

வரலாற்று பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது உள்ளூர் மட்டத்தில் நடந்த சமூக புரட்சிகளை வெளிச்சப்படுத்தும் கட்டுரை தொடரை முரசொலியில் ர.பிரகாசு எழுதி வருகிறார். இது பூந்தோட்டத்தில் நடந்த புரட்சி! “எங்கள் ஊரில் முன்பு கோயில் இருந்தது. பெரியார் ஒருமுறை எங்கள் ஊருக்கு வந்தார். ‘இந்த ஊர்ல இத்தன கோயில் இருக்கே? எத்தனை பள்ளிக்கூடம் இருக்கு? எவ்வளவு தற்குறியாவும், கைநாட்டுப் பசங்களாகவும் திரியறீங்க? பொம்பளங்கள, புள்ளை பெக்குற மெஷினாட்டம் வச்சிருக்கீங்க! பெண்களைப் படிக்க வச்சிங்கன்னா மொத்த சமுதாயத்தையும் காப்பாத்துவாங்க’ என்று பேசினார். உடனே கோயில்கள் எல்லாம் பள்ளிகளாக மாறிவிட்டன. இப்போது வீட்டுக்கு ஒரு குழந்தையை ஆசிரியருக்குப் படிக்க வைக்கிறோம். அதுவும் பெண் குழந்தையை” என்று கூறியுள்ளார்.

தினமணியின் மகளிர் மலர் ஒன்றில் ஒருமுறை மனோரமா அளித்த நேர்காணலில் சொன்ன தகவல் இது. மனோரமா சொன்ன அந்த ஊர், கடலூர் மாவட்டம், சிதம்பரத்திற்கு அருகே உள்ள பூந்தோட்டம் கிராமம். மனோரமா கூறியதுபோல, 1945-ஆம் ஆண்டில் பெரியாரும், அண்ணாவும் பூந்தோட்டம் கிராமத்திற்குச் சென்றுள்ளனர். அதுகுறித்து, ‘பூந்தோட்டத்தில் ஒரு நாள்’ என அண்ணா ‘திராவிட நாடு’ இதழில் பதிவு செய்துள்ளார். மீண்டும் 1956, 57-இல் சுயமரியாதைத் திருமணங்களை நடத்திவைக்க பூந்தோட்டம் கிராமத்திற்கு பெரியார் சென்றார். அப்போது அந்த ஊரில் எல்லா வீடுகளிலும் பெரியார் படம் இருந்தது. 1960-களில் 30-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் அங்கு உருவாகிவிட்டனர். அவ்வூரின் மக்கள்தொகையே இன்றும் சராசரியாக 500 பேர்தான். இப்போதும் அங்கு கோயில் இல்லை, சுயமரியாதைத் திருமணங்கள் தொடர்ந்து நடக்கின்றன. கல்விக்கு முக்கியத்துவம் தருவதும் இப்போதும் தொடர்கின்றது.

இது குறித்து வழக்கறிஞர் பாண்டியராஜன் (கடலூர் மாவட்டச் செயலாளர், அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம்) கூறியதாவது... “நான் 8-ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது எங்கள் ஊரில் குளங்களைத் தூர்வாரினார்கள். அப்போது உள்ளே கடவுள் சிலைகள் இருந்தன. ஆர்வமாக நாங்கள் விசாரித்தபோது, பெரியார் தாக்கத்தால் கோயில்களை அகற்றியபோது, சிலைகளை ஊர் மக்களே குளங்களில் வீசியது தெரியவந்தது. எங்கள் தலைமை ஆசிரியருக்கே பெரியார்தான் இங்கு வந்து சுயமரியாதைத் திருமணம் செய்துவைத்தார். பெரியாரால்தான் எங்கள் ஊர் கல்வியில் முன்னேறியது. அவருடைய தாக்கம் இன்னும் எங்கள் ஊரில் இருக்கிறது”.

பேராசிரியர். பூ.சி இளங்கோவன் சிதம்பரம் மாவட்டத் தலைவர் கூறுகையில் “எஸ்.எஸ்.ராஜேந்திரன் நாடகக் குழுவில் இருந்த கலைமாமணி பி.எஸ்.தட்சிணாமூர்த்தி குழுவில் நடிக்கவே மனோரமா இங்கு வந்தார். பெரியார், அண்ணா மட்டுமல்ல கலைஞர், பேராசிரியர், நாவலர், மதியழகன் போன்றோரும் ‘பூந்தோட்டம்’ வந்துள்ளனர். இப்போது 3-வது தலைமுறை மாறிவிட்டது, அதற்கேற்ப மாற்றங்களும் ஏற்பட்டுவிட்டன. ஆனால், பெரியாரின் சுவடுகள் இன்னும் தொடர்கிறன்றன.”

## உடற் கொடை அளிப்பு!



திருப்பூர் தி.வி.க தோழர் மலரவன் என்கிற மலர் மணி நாதன் உடல் நலிவுற்று சிகிச்சை பெற்று வந்த நிலையில் 28.06.2025 இரவு 8. 30 மணியளவில் மரணம் அடைந்தார். அவரது உடல் சோளிபாளையம் பாரதி நகரில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு பிறகு அவரது விருப்பத்தின் பேரில் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஞாயிற்றுக் கிழமை 29.6.2025 காலை 12.30 மணிக்கு அவரது உடல் கொடையாக வழங்கப்பட்டது.

தோழர் மலரவனின் உடலுக்கு எந்தவிதமான ஜாதி மத சடங்குகளும் செய்யப்படவில்லை. மலர் மாலை கூட அணிவிக்கப்படாமல் பெண் தோழர்கள் கொள்கை முழக்கமிட்டு உடலை சுமந்து வந்தனர். தோழரின் இணையர் பாண்டிச்செல்வி, மகள் மதுலதா, மகன் பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் கொடையாக வழங்கப்பட்டது.

மலரவன் அவர்கள் 41 ஆண்டுகளாக தந்தை பெரியார் கொள்கையை கடைபிடித்தவர். தனது குடும்ப உறுப்பினர்களை பெரியார் வழியில் நடத்தியவர் ஆவார்.

நிகழ்வில் சு.துரைசாமி பொருளாளர், வீ.சிவகாமி தலைவர் தமிழ்நாடு அறிவியல் மன்றம், அங்குமார் களப்பணி ஒருங்கிணைப்பாளர் த.பெ.தி.க யாழ் ஆறுச்சாமி மாவட்டத் தலைவர் திக, முகில் இராசு மாவட்டத் தலைவர் திவிக, தமிழ் அமுதன் உளவியல் ஆய்வாளர், சிவாச்சல மூர்த்தி திமுக, அருண் நவீன மனிதர்கள் குழு, சந்திராமணி ஆசிரியர், சங்கீதா மாவட்ட அமைப்பாளர், தனபால் மாநகரத் தலைவர், மாதவன் மாநகரச் செயலாளர், முத்து மாநகர அமைப்பாளர், சரசுவதி மாநகர அமைப்பாளர் ராமசாமி தெற்கு பகுதிச் செயலாளர், கனல்மதி தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர், தோழர்கள் முத்துலட்சுமி, இனியன், சிரிஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சேலம் இளைஞரணி முடிவுகள்!



சேலம் மாவட்ட இளைஞர் அணி கலந்துரையாடல் கூட்டம் வெள்ளார் பகுதியில் 06.07.2025 ஞாயிறு மாலை 6.00 மணிக்கு நடைபெற்றது. கலந்தாய்வு கூட்டத்திற்கு சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் தலைமை வகித்தார்.

சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சிவ சண்முகம், சேலம் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சேலம் மாவட்ட இளைஞர் அணியின் எதிர்கால செயல்திட்டங்கள் குறித்து தோழர்கள் அனைவரும் தங்களது ஆலோசனைகளையும் கருத்துகளையும் வழங்கினார்கள்.

**தீர்மானங்கள்:**

1). ஜூலை மாத இறுதிக்குள் சேலம் மாவட்ட இளைஞர் அணியின் சார்பில் மேச்சேரியில் கருத்தரங்கம் நடத்துவது எனவும்,

2). கிராமப்புற பகுதிகளில் மாதம் ஒரு தெருமுனைக் கூட்டம் நடத்துவது,

3). மாதம் ஒரு பகுதியில் கிளைக் கழக சந்திப்பு நடத்தி புதிய இளைஞர்களை திரட்டுவது.

4). புதிய இளைஞர்களுக்கு வருடம் ஒரு பயிலரங்கம் இளைஞர் அணி சார்பாக நடத்துவது,

5). பள்ளி, கல்லூரிகளில் துண்டறிக்கை பிரச்சாரங்கள் செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

நிறைவாக சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திவாகர் நன்றி கூற நிறைவு பெற்றது. சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சிவ சண்முகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திவாகர், மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன், ஆர்எஸ் பகுதிச் செயலாளர் விவேக், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் கவியரசு, தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் நாகராஜ், கொங்கணாபுரம் கோகுல், அவினேஷ், ஆனந்த், கபிலன், கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். தோழர்கள் அனைவருக்கும் தோழர் சிவ சண்முகம் தேநீர் வழங்கினார்.

## அன்பு தனசேகர் பணி ஓய்வு பாராட்டு விழா!

கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் வருமான வரித் துறையில் அதிகாரியாகப் பணியாற்றி 36 வருட பணிக்குப் பின் ஓய்வு பெற்றுள்ளார். பணி ஓய்வு பாராட்டு விழா கடந்த ஜூலை 5ஆம் தேதி சென்னை தியாகராயர் நகரில் சிறப்புடன் நடைபெற்றது. உடன் பணியாற்றிய அலுவலர்கள், உறவினர்கள், கழகத் தோழர்கள் நண்பர்கள் திரண்டு வந்திருந்தனர். அன்பு தனசேகர் மகள் வழக்கறிஞர் இளவேனில் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார்.






உரையாற்றியவர்கள் அன்பு தனசேகரின் சமூகத் தொண்டுகளை சமூக தொண்டாற்றுவதில் அவரின் ஆர்வத்தையும் பாராட்டினர். தனது பெண் மக்களை முழு சுதந்திரத்துடன் வளர்த்தார். அலுவலகத்தில் ஆளுமைகளை அழைத்து வந்து நிகழ்ச்சிகளை நடத்தினார். அதிகாரியாக இருந்தும் ஒரு அதிகாரியாக நடந்து கொள்ளாமல் எளிமையான மனிதராக எல்லோரிடமும் பழகியவர். தனக்கு கீழே பணியாற்றும் ஊழியர்களுக்கு உதவியவர். அமைப்புகளை உருவாக்கி வழி நடத்தியவர்.

பிற்படுத்தப்பட்டோர் சமூக உரிமைக்காக தொடர்ந்து களத்தில் நின்றவர். பல ஊர்களுக்கு சென்று பயிற்சி வகுப்புகளை நடத்தியவர். நடைபயிற்சி நண்பர்களை ஒருங்கிணைத்தவர், ஒவ்வொரு நாளும் நடைபயிற்சிப் பூங்காவில் திருக்குறளை எழுதியவர் என்ற சிறப்புகளை பகிர்ந்து கொண்டனர். டெல்லியில் ராகுல் காந்தியை சந்தித்தபோது இட ஒதுக்கீட்டு பிரச்சினைகளில் பல்வேறு பரிணாமங்களை நுட்பமாக விளக்கிய போது ராகுல் காந்தி தனது சந்திப்பு நேரத்தை மேலும் அதிகரித்து ஆர்வத்துடன் கருத்துக்களை கேட்டுக் கொண்டதையும் சுட்டிக் காட்டினர்.

1996 இல் பெரியார் திராவிடர் கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து, பெரியார் திராவிடர் கழகம், பிறகு திராவிடர் விடுதலைக் கழகம் வரை, ஒன்றிய அரசுப் பணியில் இருந்து கொண்டே தீவிரமாக களப்பணியாற்றி வந்தார். அதுவும் பார்ப்பன அதிகாரம் நிறைந்த வருமான வரித்துறையில் இருந்து கொண்டே அவர் பணியாற்றியதை தோழர்கள் பலரும் பாராட்டினர்.

இறுதியாக பேசிய பொதுச் செயலாளர் விடுதலை ராசேந்திரன் அன்பு தனசேகருக்கு கிடைத்த பாராட்டுகள் அனைத்தும் திராவிடர் விடுதலைக் கழகத்திற்கு கிடைத்த பாராட்டு, பெருமை என்று கூறினார். தனது பெரியார் கொள்கை அடையாளத்தை அவர் மறைக்கவில்லை. அந்த நேர்மையும் துணிவும் தான் எந்த பழிவாங்கலுக்கும் இடம் தரவில்லை என்று கூறினார் தமிழ்நாடு மாணவர் கழகம் உருவாக்கி வரும் இசை குழுவுக்கு மூன்று பறை இசைக் கருவிகளை மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, தோழி மற்றும் சர்மிளாவிடம் வழங்கினார்.

எப்போதும் அன்பு தனசேகர் உடன் இருக்கும் கழகத் தோழர் லட்சுமணன் குடும்ப நிதியாக ஒரு லட்சம் ரூபாயை விழா நினைவாக தனது தந்தையின் வழியாக வழங்கினார். 102வயது நிறைந்த தனது பாட்டியின் நீண்ட நாள் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அவருக்கு மோதிரம் ஒன்றை அணிவித்தார். விழாவில் சென்னை மாவட்ட தோழர்கள் திராளாக கலந்து கொண்டனர்.

– நமது செய்தியாளர்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : July 11, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran